செய்தி வெளியீடு எண் :31 நாள் : 17.09.2019

**தேனி மாவட்டம்,**
**குடிமராமத்து திட்டத்தின் கீழ்**
**மேல்மங்கலம் வழங்கு வாய்க்கால் சீரமைப்பு பணிகளை**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்**
**செய்தியாளர்கள் பயணத்தின் போது, பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்:-**

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், மேல்மங்கலம் கிராமத்திற்குட்பட்ட மேல்மங்கலம் வழங்கு வாய்க்கால் பொதுப்பணித்துறையின் (நீர்வள ஆதார அமைப்பு) சார்பில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள சீரமைப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்கள் பயணத்தின் போது, பார்வையிட்டு இன்று (17.09.2019) ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வுக்குப்பின் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,

தமிழக அரசு தமிழகத்தில் வறட்சியை எதிர்கொள்ளவும், நீர்வள ஆதாரங்களை மேலாண்மை செய்திடவும் விவசாயிகளின் பங்களிப்புடன் நீர் நிலைகளை புனரமைக்கும் பண்டைய குடிமராமத்து திட்டத்தினை செயல்படுத்திட உத்தரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள குளங்களில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் வரத்து வாய்க்கால் மற்றும் கால்வாய்கள், ஏரிகள், மதகுகள் மற்றும் பிற நீர்நிலைகள் ஆகியவற்றை புனரமைத்தல், பலப்படுத்துதல் மற்றும் கலிங்குகள், மதகுகளை மறுகட்டுமானம் செய்தல், நீர்வழிகளில் அடைத்திருக்கும் செடிகளை அகற்றுதல் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு) சார்பில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் தமிழக முழுவதும் உள்ள அனைத்து கண்மாய்களும் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், தேனி மாவட்டத்தில் 30 கண்மாய்கள் ரூ.10.62 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக நில அளவைத்துறையின் மூலம் குழுக்கள் அமைக்கப்பட்டு, கண்மாய்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை முறையாக அகற்றப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இக்கண்மாய்களில் நடைபெற்று வரும் பணிகளை வருவாய் மற்றும் பேரிடர்மேலாண்மைத்துறையின் சார்பில் 5 கண்மாய்க்கு வருவாய் கோட்டாட்சியர்கள் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அளவிலான அலுவலர்களை கொண்டு குழு அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் குடிமராமத்துத்திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் கண்மாய்கள் சீரமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட தோடு, பணிகள் தரமானதாகவும், விரைந்து முடித்திடவும் ஆலோசனைகள் வழங்கினார். அதன்படி, மாவட்டத்தில் கண்மாய்கள் சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, முடிவுறும் தருவாயில் உள்ளது. இப்பணிகள் வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்னதாகவே, அதாவது, எதிர்வருகின்ற 30.09.2019-க்குள் முடித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

*கண்மாய்கள் விவசாய சங்கம் மற்றும் பொதுமக்களின் 10 சதவிகித பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதால், விவசாய சங்க உறுப்பினர்களின் பங்களிப்புத் தொகை வங்கி கணக்கு எண் பெறப்பட்டு கருவூலத்துறையின் மூலம் அவர்களது வங்கி கணக்கில் செலவினத்தொகை இணையதளம் மூலம் செலுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேல்மங்கலம் வழங்கு வாய்க்கால் பணிகள் முழுவதும் நிறைவு பெற்றுள்ளது. குடிமராமத்து திட்டத்தின் கீழ் கண்மாய்கள் சீரமைக்கும் பணிகள் மேற்கொண்டு வருவதால் மாவட்டத்திலுள்ள விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் தங்களது அதிகப்படியான மகிழச்சியினை தெரிவித்துள்ளனர் என தெரிவித்தார்.*

*ஆய்வின்போது, பொதுப்பணித்துறை (நீர்வள ஆதாரஅமைப்பு) செயற்பொறியாளர் சுந்தரப்பன், உதவி செயற்பொறியாளர்கள் தமிழ்செல்வன், கார்த்திகேயன், வட்டார வளர்ச்சி அலுவலர் சரவணன் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் உடனிருந்தனர்.*

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***